சின்னச் சின்னதாய்...

வடசென்னை அனல் மின் நிலையத்தில் 210 மெகாவாட் உற்பத்தி பாதிப்பு

● பொன்னேரி

திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூர் அருகே அத்திப்பட்டு புதுநகரில் உள்ள வடசென்னை அனல் மின்நிலையத்தின் முதல் நிலையின் 3 அலகுகளில் 630 மெகாவாட், 2–வது நிலையின் இரு அலகுகளில் 1,200 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், முதல் நிலையின் 2–வது அலகில் நேற்று காலை திடீரென தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டது. இதனால், அந்த அலகில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்டது. இதையடுத்து, 210 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பக் கோளாறை சரி செய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர். அப்பணி ஓரிரு நாளில் முடிவுக்கு வரும் என அனல் மின் நிலைய அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செங்கை, காஞ்சிபுரம் மாவட்டங்களில் மக்கள் நீதிமன்றம் மூலம் 167 வழக்குகள் பைசல்

● செங்கல்பட்டு

செங்கை, காஞ்சி மாவட்டங்களில் நடந்த வாகன விபத்து இழப்பீட்டுக்கான மக்கள் நீதிமன்றம் நேற்று செங்கல்பட்டு மாவட்ட ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது. முதன்மை மாவட்ட நீதிபதியும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவருமான மேவிஸ் தீபிகா சுந்தரவதனா முன்னிலையில் மக்கள் நீதிமன்றம் தொடங்கியது.

இதில் மாவட்டம் முழுவதிலும் இருந்து மொத்தமாக 494 வழக்குகள் எடுத்துக் கொள்ளப்பட்டு விசாரிக்கப்பட்டன. இதில் 167 வழக்குகளுக்குத் தீர்வு காணப்பட்டன.

இதன்படி ஒரேநாளில் 6 கோடியே 84 லட்சத்து 42,800 மதிப்பிலான வழக்குகள் பைசல் செய்யப்பட்டன. மேலும் கூடுதல் மாவட்ட நீதிமன்ற நீதிபதி காயத்ரி, மக்கள் நீதிமன்ற தலைவர் மோகனகுமாரி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளரும் கூடுதல் சார்பு நீதிபதியுமான (பொறுப்பு) தமிழ்ச்செல்வி உட்பட பலர் கலந்து கொண்டனர்.

செங்கல்பட்டு அருகே ரூ.25.58 கோடி மதிப்பில் ரயில்வே மேம்பாலம் கட்ட அமைச்சர் அடிக்கல்

● செங்கல்பட்டு

செங்கல்பட்டு மாவட்டம் நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை சார்பில் பழைய ஜி.எஸ்.டி சாலை – திருக்கழுக்குன்றம் வழி பொன்விளைந்த களத்தூர் சாலையில் ரூ.26.58 கோடி மதிப்பில் ரயில்வே மேம்பாலம் அமைக்கும் பணியை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று அடிக்கல் நாட்டி பணிகளை தொடங்கி வைத்தார்.

அதனை தொடர்ந்து திருக்கழுகுன்றம் நகரப்பகுதியில் காஞ்சி எம்பி தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.20 லட்சத்தில் கட்டப்பட்ட பாவேந்தர் பாரதிதாசன் நூலகத்தின் புதிய கட்டிடத்தையும் அமைச்சர் நேற்று திறந்துவைத்தார்.

நிகழ்ச்சியில் எம்.பி. க.செல்வம், எம்எல்ஏ எஸ்.எஸ். பாலாஜி, கோட்ட பொறியாளர் அருணா, கண்காணிப்பு பொறியாளர் தனசேகரன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

நீர்நிலைகள் வறண்டு வருவதால் விலங்குகளின் தாகம் தீர்க்க

வனப்பகுதி தொட்டிகளில் நீர் நிரப்ப வேண்டும்

● செங்கல்பட்டு மாவட்ட வனத்துறை அதிகாரிகளுக்கு கோரிக்கை

கோ.கார்த்திக்

● திருக்கழுக்குன்றம்

செங்கல்பட்டு மாவட்டத்தின் வனப்பகுதிகளில் உள்ள நீர் நிலைகள் கோடைகாலத்தின் தொடக்கத்திலேயே வறண்டதால், வனவிலங்குகளின் குடிநீர் தேவைக்காக வனப்பகுதிகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் நீர் நிரப்ப கோரிக்கை எழுந்துள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்தில் திருக்கழுகுன்றம், திருப்போரூர், மதுராந்தகம், செங்கல்பட்டு ஆகிய பகுதிகளில் காப்புக்காடு உட்பட வனப்பகுதிகள் மற்றும் மலைகள் அமைந்துள்ளன. இங்கு, சிறுத்தை, மான் இனங்கள், கழுதை புலி, நரி, மயில், காட்டுப்பூனை உள்ளிட்ட வனவிலங்குகள் உள்ளன.

கடந்த ஆண்டு பெய்த கனமழை காரணமாக, வனப்பகுதிகளில் உள்ள நீர்நிலைகள் நிரம்பின. மேலும், விலங்குகளின் தண்ணீர் தேவைக்காக கசிவுநீர் குட்டை மற்றும் குடிநீர் தொட்டிகளை வனப் பகுதிக்குள் வனத்துறை ஆங் காங்கே அமைத்ததால், வன விலங்குகளுக்கு தட்டுப்பாடின்றி தண்ணீர் கிடைத்தது.

இந்நிலையில் தற்போது கோடை காலத்தின் தொடக்கத்தி லேயே வனப்பகுதியில் உள்ள நீர் நிலைகள் வேகமாக வறண்டு வரு கின்றன. மேலும், வனப்பகுதிகளில் உள்ள கசிவுநீர் குட்டைகள் உட்பட வனப்பகுதியில் உள்ள நீர் நிலைகள் வறண்டு காணப்படுகின்றன.

இதனால், வனவிலங்குகளின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்வதற்காக, வனப்பகுதிகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பும் பணிகளை வனத் துறை மேற்கொள்ள வேண்டும் என வனவிலங்கு ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து, அவர்கள் கூறும் போது, "வறட்சியால் மான்கள் தண்ணீர் தேடி கிராமப்பகுதி களுக்கு வருகின்றன. அப்போது, வாகனங்கள் மோதியும் மற்றும் நாய்களால் தாக்கப்பட்டு உயிரி ழக்கும் நிலை உள்ளது. அதனால், வனப்பகுதிகளில் உள்ள தண்ணீர் தொட்டிகளில் நீர்நிரப்பும் பணி களை வனத்துறையினர் தொடங்க வேண்டும்" என்றனர்.

இதுகுறித்து, செங்கல்பட்டு மாவட்ட வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது: கடந்த சில ஆண்டு களாக மழையளவு குறைந்து காணப்பட்டதால், பிப்ரவரி மாதத் திலேயே வனப்பகுதியில் உள்ள நீர் நிலைகள் வறண்டு காணப்படும். அப்போது, தொட்டிகளில் தண் ணீர் நிரப்பும் பணிகள் தொடங்கப் படும்.

வறட்சி ஏற்படும்

ஆனால், கடந்த ஆண்டு மழைப்பொழிவு அதிகமாக இருந்த தால் நீர்நிலைகள் நிரம்பி வழிந் தன. அதனால், தற்போதுதான் நீர் நிலைகள் வறண்டு வருகின்றன. கோடை வெப்பத்தின் தாக்கம் அதி கரித்து வருவதால் வனப்பகுதி களில் இனி வரும் நாட்களில் வறட்சி ஏற்படும். எனவே, தொட்டிகளில் தண்ணீர் நிரப்பும் பணிகள் விரை வில் தொடங்கப்படும் என்றனர்.

உதவித்தொகை பெற தமிழறிஞர்களுக்கு அழைப்பு

● செங்கல்பட்டு

செங்கல்பட்டு மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

அகவை முதிர்ந்த தமிழறிஞர் களுக்கு உதவித்தொகை வழங் கும் திட்டத்தின்கீழ் 2022-2023 ம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு ஜன.1-ம் நாளன்று 58 வயது நிறைவடைந் திருக்க வேண்டும். ஆண்டு வரு வாய் ரூ.72,000-க்குள் இருக்க வேண்டும். உரிய ஆவணங்க ளுடன் விண்ணப்பத்தை நேரிலோ அல்லது தமிழ் வளர்ச்சித் துறையின் வலைத்தளத்திலோ (www.tamilvalarchithurai.tn.gov.in) படிவத்தை பதிவிறக் கம் செய்து விண்ணப்பிக்கலாம். தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மாதாந்திர உதவித் தொகை யாக ரூ.4000 வாழ்நாள் முழு வதும் வழங்கப்படும்.

டிப்பர் லாரியுடன் நேருக்குநேர் மோதிய விபத்தில்

அரசு பேருந்து ஓட்டுநர் உயிரிழப்பு

செங்கை அருகே 25 பேர் படுகாயம்; ஆட்சியர் ஆறுதல்

● செங்கல்பட்டு

செங்கல்பட்டு அடுத்த மேலேரி பாக்கம் பகுதியில் அரசு பேருந்தும் டிப்பர் லாரியும் நேருக்குநேர் மோதிய விபத்தில் அரசு பேருந்து ஓட்டுநர் உயிரிழந்தார். 25 பேர் படுகாயமடைந்தனர்.

கல்பாக்கத்திலிருந்து செங் கல்பட்டு நோக்கி நேற்று மாலை அரசு பேருந்து சென்று கொண் டிருந்தது. பேருந்தை காஞ்சிபுரம் மாவட்டம் சாலவாக்கம் பகுதியைச் சேர்ந்த கார்த்திகேயன் ஓட்டி னார். எதிர் திசையில் மேல்வலம் பேட்டை பகுதியைச் சேர்ந்த மோகன் என்பவர் ஓட்டி வந்த டிப்பர் லாரி வந்துள்ளது. மலாலி நத்தம் வளைவு பகுதியில் வந்த போது பேருந்தும் டிப்பர் லாரியும் நேருக்கு நேர் மோதி விபத்துக் குள்ளானது.

இதில் அரசு பேருந்து, லாரியின் முன்பக்கம் அப்பளம்போல் நொறுங்கியது. இதில் லாரி மற் றும் பேருந்து ஓட்டுநர் உட்பட பேருந்தில் பயணம் செய்த 25 பேர் பலத்த காயமடைந்தனர். அவர் கள் செங்கல்பட்டு அரசு மருத் துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

செங்கல்பட்டு அருகே நடந்த விபத்தில் உருக்குலைந்த வாகனங்கள்.

இந்நிலையில் பேருந்து ஓட்டுநர் கார்த்திகேயன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இதனிடையே விபத்தில் பாதிக்கப்பட்டவர்களை மாவட்ட ஆட்சியர் ஆ.ரா. ராகுல் நாத் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப் ஆகியோர் சந்தித்து ஆறு தல் தெரிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் ஆட்சியர் கூறும்போது, விபத் தில் காயமுற்றோர்களுக்கு சிறப் பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது. மேலும் உடனடியாக கூடுதல் மருத்துவர்களை அமர்த்தி சிகிச்சை மேற்கொள்ளவும் காய மடைந்தவர்களுக்கென தனி வார்டு ஏற்பாடு செய்யவும் உத்தர விடப்பட்டுள்ளதாக ஆட்சியர் தெரிவித்தார்.

யதோக்தகாரி பெருமாள் கோயில் பிரம்மோற்சவம் 15–ம் தேதி தொடக்கம்

● காஞ்சிபுரம்

காஞ்சிபுரம் நகரப்பகுதியில் அமைந்துள்ள யதோக்தகாரி பெருமாள் கோயிலில் வரும் 15-ம் தேதி பங்குனி பிரமோற்சவம் கொடியேற்றத்துடன் தொடங்க உள்ளது.

காஞ்சிபுரத்தில் 108 திவ்ய தேசங்களில் ஒன்றாக விளங்கும் சொன்னவண்ணம் செய்த பெருமாள் என அழைக்கப்படும் யதோக்தகாரி பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில், ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் பிரம்மோற்சவம் நடைபெறும். இந்தாண்டுக்கான பிரம் மோற்சவம் வரும் 15-ம் தேதி அதி காலை 4.30 மணி முதல் 6.30 மணிக் குள்ளான முகூர்த்தத்தில் கொடி யேற்றத்துடன் தொடங்க உள்ளது.

இதையடுத்து, அடுத்து வரும் 10 நாட்களுக்கு காலை மற்றும் மாலை யில் பல்வேறு வாகனங்களின் மீது சுவாமி வீதியுலா நடைபெற உள்ளது.

இதில், முக்கிய உற்சவமாக வரும் 17-ம் தேதி காலை கருடசேவை உற்சவம், 19-ம் தேதி தங்கபல்லக்கு (நாச்சியார் திருக்கோலம்), 21-ம் தேதி திருத்தேர் உற்சவம், 23-ம் தேதி தீர்த்தவாரி உற்சவங்கள் நடைபெற உள்ளதாக கோயில் நிர்வாகம் தெரி வித்துள்ளது.

அரசியல், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.
மின்னஞ்சல் முகவரி: press.release@hindutamil.co.in

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அடிப்படையில் செயல்படுமுன், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல் மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்கொள்ளின நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர் கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

வரி விளம்பரங்கள்

சுய செய்தி

பெயர்மாற்றம்

I Clifford Raglyn Cooper S/O, Joseph Jossery Cooper Born on 01/03/1979 R/O Plot 2 No 6, Silapathikaram 2 Cross Street, Thenral Nagar, Anakaputhur, Kancheepuram Tamil Nadu -600070 shall henceforth be known as Cooper Raglyn Clifford for all purposes

I, M. Arulraj, son of Thiru A. Maria Sabastion, born on 25th March 1966 (District of Birth: Kanyakumari), residing at No. 8, Temple Street, Kilpauk, Chennai-600 010, shall henceforth be known as M. MARIA ARUL RAJ. - M. ARULRAJ Chennai, 21st February 2023..

I, M.A. Gladis alias G. Gladis, wife of Thiru M. Maria Arul Raj, born on 29th October 1975 (District of Birth: Chennai), residing at No. 8, Temple Street, Kilpauk, Chennai-600 010, shall henceforth be known as GLADIS MARIA ARUL RAJ. - M.A GLADIS alias G. GLADIS Chennai, 3rd March 2023.

பொது

பொது அறிவிப்பு

குடியிருப்பு எண் 4A, தோஷி ரெசிடென்சி காம்ப்ளெக்ஸ், எண் 17/9, வடக்கு தண்டபாணி தெரு, தி. நகர், சென்னை 600017 என்ற விலாசத்தில் உள்ள வீட்டை திரு மொவ்வா ராம் ஸ்வரூப் என்பவரது மனைவி திருமதி மொவ்வா பிரவீனா என்பவரிடமிருந்து கிரையம் பெறப்பட உள்ளது. இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால், தக்க ஆவணங்களுடன் இந்த அறிவிப்பு வெளியான 7 நாட்களுக்குள் கீழ்கண்ட மின்னஞ்சல் முகவரிக்கு தெரிவிக்கவும். மேற்கூறியபடி ஏழு நாட்களுக்குள் எவ்விதமான உரிமை கோரல்களோ, மறுப்போ அல்லது எதிர்ப்போ, தகுந்த ஆவணங்களுடன் தெரிவிக்கபடவில்லை எனில், இந்த சொத்து பரிமாற்றத்தில் எவருக்கும் ஆட்சேபனை இல்லை எனக் கருதி கிரையம் பெறப்படும். அதற்குப்பின் எவ்விதமான மறுப்போ, எதிர்ப்போ ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. மின்னஞ்சல் முகவரி: sridhar01081968@gmail.com

கன்டோன்மென்ட் தேர்தல் பணிகள் திமுக ஆலோசனை

● பல்லாவரம்

பரங்கிமலை - பல்லாவரம் கன்டோன்மென்ட் தேர்தல் ஏப்ரல் 30 தேதி நடைபெற வுள்ளது. இதனை தொடர்ந்து பரங்கிமலை - பல்லாவரம் கன்டோன்மென்ட் நகர திமுக சார்பாக ஆலோசனை கூட் டம் பல்லாவரம் கன்டோன் மென்ட் பகுதியில் நேற்றுமுன் தினம் நடைபெற்றது.

இதில் அமைச்சர் தா.மோ. அன்பரசன் பங்கேற்றார். எம்எல்ஏ இ.கருணாநிதி, தீர்மானக் குழு செயலாளர் மீ.அ.வைத்தியலிங்கம், மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

பொன்னேரி தனியார் ஊழியர் கொலையில் 2 பேர் கைது

● பொன்னேரி

பொன்னேரி அருகே உள்ள நந்தி யம்பாக்கம் பகுதியைச் சேர்ந்தவர் பால முருகன் (48). தனியார் நிறுவன ஊழியர். கடந்த 10-ம் தேதி பொன்னேரி அருகே ஆலாடு பகுதியில் தங்கியுள்ள உறவினர் ராபர்ட்டை பார்க்கச் சென் றுள்ளார். அப்போது அங்கிருந்த 3 பேர் தகறாரில் ஈடுபட்டு, அவரை கல் லால் தாக்கியதாக கூறப்படுகிறது. இதில், படுகாயமடைந்த பாலமுருகன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தது தெரியவந்தது.

இதுகுறித்து, பொன்னேரி போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்ததில், ஆலாடு பகுதியைச் சேர்ந்த, திமுகவைச் சேர்ந்த பொன்னேரி நகராட்சி 17-வது வார்டு கவுன்சிலர் இளங்கோவுக்கும் அவரது சகோதரர் மோகனின் மகள் காயத்ரி குடும்பத்தினருக்கும் இடையே நிலத்தகராறு இருந்து வந்துள்ளது.

இந்த தகராறு தொடர்பாக, காயத்ரி யின் உறவினரான ராபர்ட், தனது மாமா பாலமுருகனை வீட்டுக்கு அழைத்ததால், அங்கு சென்ற அவரை நிலப்பிரச் சினையில் தொடர்புடைய மற்றொரு சகோதரரின் மகன்கள் வினோத், திலீப் மற்றும் அவர்களின் நண்பர் ராஜ்கிரண் ஆகிய 3 பேரும் சேர்ந்து பாலமுருகனை கொலை செய்தது தெரியவந்ததாக போலீஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து, பாலமுருகன் கொலை தொடர்பாக வினோத், ராஜ்கிரண் ஆகிய இருவரை நேற்று போலீஸார் கைது செய்தனர். தலைமறைவாக உள்ள திலீப்பை தேடி வருகின்றனர்.

மியாட் இன்டர்நேஷனல் மருத்துவமனை சார்பில் நடத்தப்பட்ட அணு மருத்துவத்தின் முக்கியத்துவம் குறித்த 2 நாள் கருத்தரங்கம் தொடக்க விழாவில் பங்கேற்றோர்.

மியாட் மருத்துவமனையில்

அணு மருத்துவம் குறித்த 2 நாள் கருத்தரங்கம்

● சென்னை

மியாட் இன்டர்நேஷனல் மருத்துவமனை வெளியிட்ட செய்திக்குறிப்பு: மியாட் இன்டர்நேஷனல் மற் றும் சொஸைட்டி ஆஃப் நியூக் ளியர் மெடிசின்- இந்தியா (தெற்கு பிரிவு) இணைந்து அறிவியல் அறிவு மற்றும் அணு மருத்துவத்தின் முக்கி யத்துவத்தை அதன் மருத்து வத்தை சகோதரத்துவத்து டன் பகிர்ந்துகொள்ள 'தெர னோஸ்டிக்ஸில் மாஸ்டர் கிளாஸ் - 360 டிகிரிஸ் ஆஃப் பிஎஸ்எம்ஏ தெரனோ ஸ்டிக்ஸ்' என்ற கருத்தரங்கை மார்ச் 11, 12 தேதிகளில் நடத் தியது.

விஞ்ஞான நடைமுறை கள், தற்போதைய சான்று கள், மருத்துவக் கண் ணோட்டங்கள், குழு விவா தங்கள், கலந்துரையாடல் கள், சவாலான வழக்கு விவாதங்கள் மற்றும் ஸ்கேன் வாசிப்பு அமர் வுகள் ஆகியவற்றைப் பரி மாறிக்கொள்வதற்காக இந்த களம் உருவாக்கப்பட்டது.

மியாட் இன்டர்நேஷனல் அணு மருத்துவத்துறை அதிநவீன மூலக்கூறு இமேஜிங், ரேடியோநியூக் ளைடு சிகிச்சைகளை வழங் குகிறது. பிஎஸ்எம்ஏ தெரனோ ஸ்டிக்ஸை பயன்படுத்தி நோயாளிகள் மேலாண்மை யில் ஒரு முழுமையான அணுகுமுறையை புரிந்து கொள்வதற்காக மருத்துவ சக ஊழியர்களுக்கு இந்த அமர்வு நடத்தப்பட்டது. இதில் 250-க்கும் மேற்பட்ட பிரிதிநிதிகள் கலந்து கொண்டனர்.

வருந்துகிறோம்!

இரங்கல்

ஆண்டு நினைவு நாள்

9-ம் ஆண்டு நினைவு தினம்

Dr.K.சூர்யா MBBS

ஆண்டுகள் போனாலும்
உன் நினைவால் நகரும்
எங்கள் வாழ்க்கை..
சூரியன், நிலவைப் போல
தென்றல், குறாவளி போல
சிரிப்பு, அழுகை போல
மகிழ்வும் துக்கமும் போல
உன் பிறப்பும்.., இறப்பும்
பூவைப் போல மலர்ந்த
உன் பிறப்பு எங்கள் வாழ்வை
அர்த்தமுள்ளதாக்கியது..
சருகென உதிர்ந்து போன
உன் இறப்பு எங்கள் வாழ்வை
வெறுமையாக்கியது..
நீ இல்லாத காலத்தை
உன் நினைவால் நிரப்புகிறோம்...
உயிர் மறைந்தாலும் – உன்
நினைவுகளே எங்களின்
உயிராய் இருக்கிறது..

தந்தை, தாய், சகோதரிகள், பாட்டி

Dr.K.சூர்யா கல்வி மற்றும் மருத்துவ அறக்கட்டளை

கோஸ்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட்-ன் EoI சமர்ப்பிபதற்கான கடைசி தேதி நீட்டிப்பு
பிப்ரவரி 10, 2023 அன்று வெளியிடப்பட்ட படிவம் G க்கு சேர்க்கை மற்றும் பிப்ரவரி 24, 2023 அன்று பிற்சேர்க்கை வெளியிடப்பட்டது

இது படிவம் G விருப்ப வெளிப்பாடு அழைப்பு ("EOI") குறித்தது, பிசினஸ் ஸ்டாண்டர்டு மற்றும் எக்னாமிக் டைம்ஸ் அகில இந்திய பதிப்புகளில் மற்றும் இந்துவின் தமிழ் பதிப்புகளில் ("பிரதான விளம்பரங்கள்") பிப்ரவரி 10, 2023 அன்று வெளியிடப்பட்ட "கோஸ்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட்" நிறுவனத்தின் கார்ப்பரேட் இன்சால்வென்சி ரெசல்யூஷன் செயல்முறை தொடர்பான தீர்மானத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்கான விருப்பத்தை வெளிப்படுத்துவதற்கான அழைப்பு ("EOI") விளம்பரத்தைப் பற்றியது மற்றும் திவால் மற்றும் திவால்நிலை (கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான திவால்நிலைத் தீர்வு செயல்முறை) விதிமுறைகள், 2016-ன் 36A(1) விதிமுறைகளின்படி EoI-களை சமர்ப்பிக்க கடைசி தேதி பிப்ரவரி 25, 2023 என்று இருந்தது, மற்றும் இது சம்பந்தமாக EoI-களை சமர்ப்பிக்கும் கடைசி தேதி மார்ச் 12, 2023 என்று பிப்ரவரி 24, 2023 அன்று இதே செய்தி தாள்களில் நீட்டிப்பு அறிவிக்கப்பட்டது.

EoI-களை சமர்ப்பிதற்கான தேதி மேலும் **மார்ச் 27, 2023** வரை நீட்டிக்கப்படுகிறது என்பதை நினைவில் கொள்ளவும். மற்ற எல்லா விதிமுறை, நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் இல்லை.

EoI மற்றும் மற்ற ஆவணங்களுக்கான அழைப்பதழின் புதுப்பிக்கப்பட்ட ஆவணத்திற்கு தயவு செய்து http://www.coastalenergen.com/cirp.html பார்க்கவும் அல்லது எங்களுக்கு cirp.coastal@gmail.com எழுதவும்.

Sd/-
திரு. ராதாகிருஷ்ணன் தர்மராஜன்
தீர்மான வல்லுநர்
IBBI/IPA-001/IP-P00508/2017-18/10909
எண்.31, கிருஷ்ணா 1வது அவென்யூ
100 அடி சாலை, அசோக் நகர், சென்னை - 600083, தமிழ்நாடு
கோஸ்டல் எனர்ஜென் பிரைவேட் லிமிடெட்-க்கான
AFA செல்லுபடி காலம் : நவம்பர் 30, 2023
நாள் : மார்ச் 12, 2023
இடம் : சென்னை

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, சென்னை-38
இந்தியன் இரயில்வே
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.ICF/EL/Cons/2022-23 நாள் : 13.03.2023

மேதகு இந்திய குடியரசுத் தலைவரின் சார்பாகவும் தன் சார்பிலும் துணைத் தலைமை மின்சார பொறியாளர் / பராமரிப்பு / ஷெல். இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை அவர்கள், பின்வரும் பணிகளுக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகளை வரவேற்கிறார் :-

ஒப்பந்தப்புள்ளி எண்.	வேலையின் பெயர்	தோராய மதிப்பு இலட்சங்களில் (ரூ.)	டேவணித் தொகை (ரூ.)	ஒப்பந்தப்புள்ளி மூடப்படும் நாள் / நேரம்
(1)	(2)	(3)	(4)	(5)
2023245210981	EL-W-850 : ICF-ல் பொது முகவரி அமைப்பு வழங்குதல் (VB-II திட்டத்தின் கீழ்)	100.06	200000.00	12.04.2023 15.30 மணிக்கு

விலைப்புள்ளிகளை சமர்ப்பிப்பதற்கான இணையதளம்: www.ireps.gov.in மேற்சொன்ன ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புக்கான இந்தி மொழி வடிவம் இணையதளம் https://icf.indianrailways.gov.in -ல் கிடைக்கும்.

G20 வசுதைவ குடும்பகம் ஒரே பூமி - ஒரே குடும்பம் - ஒரே எதிர்காலம்

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, சென்னை-38
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.2023235210920 நாள் : 07.03.2023

கீழ்க்கண்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளி IREPS இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. நிறுவனங்கள் www.ireps.gov.in இணையதளத்தைப் பார்வையிட்டு இந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கு விலைப்புள்ளிகளை குறிப்பிடும்படி கேட்டுகொள்ளப்படுகிறார்கள். இந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கு காகித வடிவ விலைப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வ.எண்.	பகிரங்க ஒப்பந்தப்புள்ளி எண்.	பணியின் சுருக்கமான விவரம்	ஒப்பந்தப்புள்ளி மதிப்பு (ரூ.)	ரசீது கடைசி தேதி
1.	2023235210920	TRAIN SET பெட்டிகளில் இயந்திரமயமாக்கப்பட்ட துப்புரவு மின் உபகரணங்கள் மற்றும் பேனல்கள்	87,28,752/-	20.03.2023 14.30 மணிக்கு

மேற்சொன்ன ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புக்கான இந்தி மொழி வடிவம் https://icf.indianrailways.gov.in - என்ற இணையதளத்தில் கிடைக்கும்.

G20 வசுதைவ குடும்பகம் ஒரே பூமி - ஒரே குடும்பம் - ஒரே எதிர்காலம்

இ.பெ.தொ. மருத்துவமனை, சென்னை - 38

கீழ்க்கண்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளி IREPS இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. நிறுவனங்கள் www.ireps.gov.in இணையதளத்தைப் பார்வையிட்டு இந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கு விலைப்புள்ளிகளை குறிப்பிடும்படி கேட்டுகொள்ளப்படுகிறார்கள். இந்த ஒப்பந்தப்புள்ளிகளுக்கு காகித வடிவ விலைப்புள்ளிகள் கவனிக்கப்பட மாட்டாது.

பொது ஒப்பந்த எண்.	ஐட்டத்திற்கான சிறு குறிப்பு	ஒப்பந்த மதிப்பு (ரூ.)	ஒப்பந்த தேதி முடிவு	ஒப்பந்த தேதி ஆரம்பம்
2023499210976	ஃபர்னிஷிங் பிரிவுக் கடைகளில் ஸ்டோர் வார்டுகளிலிருந்து குறிப்பிட்ட இடத்துக்கு / தொடர்வண்டிப் பெட்டிக்குத் தொடர்வண்டிப் பெட்டிப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கான ஃபோர்க்லிஃப்ட் டிரக்குகளை அதற்கான மேற்பார்வையாளர்கள் மற்றும் சரக்குகளைக் கையாளும் ஊழியர்கள் ஆகியோருடன் சேர்த்து வாடகைக்கு எடுப்பதற்கான சேவை ஒப்பந்தம்.	5,29,68,755/-	03.04.2023 14.45 மணிக்கு	03.04.2023 15.00 மணிக்கு

மேற்சொன்ன ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புக்கான இந்தி மொழி வடிவம் https://icf.indianrailways.gov.in என்ற இணையதளத்தில் கிடைக்கும்.

G20 வசுதைவ குடும்பகம் ஒரே பூமி - ஒரே குடும்பம் - ஒரே எதிர்காலம்

இணைப்புப் பெட்டித் தொழிற்சாலை, சென்னை - 38
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் ICF/PCMM/EOT/10/2023 நாள்: 10.03.2023

கீழ்க்காணும் மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் IREPS இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. எனவே. நிறுவனங்கள் www.ireps.gov.in இணையதளத்தில் உள்நுழைந்து (login) குறிப்பிட்ட ஒப்பந்தப்புள்ளிகளின் பேரில் விலைப்புள்ளி கோருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இந்த ஒப்பந்தப்புள்ளிக்கு மேனுவல் விலைப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளும் திறக்கப்படும் மற்றும் மூடப்படும் நேரம் 14.15 மணி. குறிப்பிட்ட விளம்பரத்தின் இந்தி மொழி வடிவம் கிடைக்கும் இணையதளம்: www.icf.indianrailways.gov.in

வ. எண்.	டெண்டர் எண்	டெண்டர் தலைப்பு	அளவு	கெடு தேதி / நேரம்
1	01235065A	SNK 5 AXIS CNC இயந்திர மையத்தின் ஆங்குலர் அடாப்டர்	1 செட்	21.03.2023
2	07231265	அலுமினிய கலவை பேனல் வழங்கல்	11537 எண்ணிக்கை	24.03.2023
3	02230032	ரூப் ஷீட் மொத்தம்	16 செட்ஸ்	27.03.2023
4	02231205	TS/DTC2 இறுதி சுவர் 8 கார் உறுவாக்